

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.05.2025) சென்னை, பெசன்ட் நகரில் உள்ள கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அண்மையில் அவரது தாயார் திருமதி அங்கம்மாள் அவர்கள் காலமானதையொட்டி அவருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கழகப் பொறுளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., வைரமுத்து அவர்களின் மகன் மதன் கார்க்கி ஆகியோர் உடனிருந்தனர்.

### முன்னத்தி ஏராகக் கழகத்தினருக்கு வழிகாட்டும்

# சோ.மா.இராமச்சந்திரன், நீடு வாழ்க பல்லாண்டு!

## 100வது பிறந்தநாள் கொண்டாடுவதையொட்டி – வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மே 18-**

**அண்மையில் 100வது பிறந்த நாளை கொண்டாடிய கழக மூத்த முன்னோடியும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சோ.மா. ராமச் சந்திரன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தது தொடர்பாக முதலமைச் சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளி யிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



கொள்கை நெறி தவறாத பாதையில், கடும் உழைப்பால் முன்னேறியவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் நூறாண்டுகளைக் கடந்து கழகத் தின் மூத்த முன்னோடியாக நமக் கெல்லாம் திசைகாட்டியாக வாழ்பவருமான சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்தினோம்.

திருவண்ணாமலை மாவட்டத்தின் ஆரணி பகுதியில் பிறந்து, பின்னர் சென்னையில் குடியேறி, தேநீர்க் கடை ஒன்றை நடத்தி, தனது உழைப்பால் உயர்ந்த அவர், திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் இணைந்து பணியாற்றியவர். மிசாவில் சிறை கண்டவர். 30 ஆண்டுகாலம் பகுதிச் செயலாளர், ஒருமுறை சட்டமன்ற உறுப்பினர் என மக்கள் தொண்டாற்றி அண்ணா நகர் வாழும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர். தலைவர் கலைஞர் பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டபோது, அவர்களது வெற்றிக்காகக் களப் பணியாற்றியவர்.

முன்னத்தி ஏராகக் கழகத்தினருக்கு வழிகாட்டும்

சோ.மா.இராமச்சந்திரன் அவர்கள் நீடு வாழ்க பல்லாண்டு!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2025) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் சனிக்கிழமை நாட்களில், நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, அனைவருக்கும் உணவு பரிமாறினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.சி.பழனி, மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



கழக சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கழக முன்னோடி – நூறாவது பிறந்த நாள் காணும் சோ.மா.இராமச்சந்திரன் அவர்களை அவரது இல்லத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளகள் திருச்சி சிவா எம்.பி., சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். உடன் அண்ணாநகர் மோகன் எம்.எல்.ஏ., தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், பகுதிச் செயலாளர் பரமசிவம் ஆகியோர் உள்ளனர்.



தந்தை பெரியார் அவர்கள் நடத்திய ‘குடியரசு ஏடு’ இந்த ஆண்டு நூற்றாண்டு விழா காண்கின்றது. அந்த ஏட்டின் 19 ஆயிரம் பக்கங்களை 43 தொகுதிகளாக மறு பதிப்பாக தந்தை பெரியார் திராவிடர் கழகம் வெளிக்கொண்டுவர இருக்கிறது. வருகிற செப்டம்பர் 17ஆம் தேதி வெளியிடப்படும் குடியரசு தொகுப்பை திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட வேண்டுமென முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து தந்தை பெரியார் திராவிட கழக பொதுச்செயலாளர் ராமகிருஷ்ணன் அழைப்பு விடுத்தார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தந்தை பெரியார் திராவிட கழக பொறுப்பாளர்கள் பொள்ளாச்சி மனோகரன், உடுமலை கருமலை அப்பன், பொள்ளாச்சி பிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### சனிக்கிழமைகளில் - திருவல்லிக்கேணி

# பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் - நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார் !

**சென்னை, மே 18-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2025) திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்த சாரதி சுவாமி திருக்கோயிலில் சனிக்கி ழமை நாட்களில், நாள் முழுவதும் அன் னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நிறைவான உணவு வழங்க அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, திருக்கோயில்களில் ஒரு வேளை அன்னதானம், நாள் முழுவதும் அன்னதானம், திருவிழா மற்றும் சிறப்பு நாட்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டிற்கு முன் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகிய 2 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 754 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானமும் வழங்கப்பட்டு வந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், கடந்த நான்காண்டுகளில் கூடுதலாக 11 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தற்போது 13 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு தற்போது 764 திருக்கோயில்களில் ஒருவேளை அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 3.5 கோடி பக்தர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

2025-2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், “சென்னை, திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் சனிக்கிழமைகள் மற்றும் விழா நாட்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும்” என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் துணை முதலமைச்சர் அவர்கள் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நேற்று (17.05.2025) சனிக்கிழமை அன்று நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இதனடிப்படையில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் வாரந்தோறும் சனிக்கிழமைகள், புரட்டாசி மாதம் முழுவதும் அனைத்து நாட்களிலும், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருத்தேரோட்டம், அருள்மிகு நரசிம்மர் சுவாமி திருத்தேரோட்டம், மாசிமகம், வைகுண்ட ஏகாதசி ஆகிய 82 நாட்களில் வடை, பாயசத்துடன் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் மேற்குறிப்பிட்ட நாட்களில் ஆண்டொன்றுக்கு திருக்கோயிலுக்கு வருகை தரும் 82,000 பக்தர்கள் பயன்பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திபி. என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர். சி.பழனி, மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2025) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் சனிக்கிழமை நாட்களில், நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, மக்களோடு மக்களாக தாமும் அமர்ந்து உணவருந்திய காட்சி! இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.சி.பழனி, மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம் மாநில அளவில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 98.31 சத வீதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து திருப்பத்தூர், நாகப்பா, மருதப்பா அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு இனிப்புகளை வழங்கி, சிவகங்கை மாவட்ட மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.